# சுதந்திர இலங்கையின் கல்வி வளர்ச்சியில் அரசியல் தலையீடு ஏற்படுத்திய விளைவுகள்

- கே.ரீ. கணேசலிங்கம்.

சுதந்திர இலங்கைக்கான கல்விக் கொள்கையில் தொலை நோக்கு (vision) எதுவும் காணமுடியாத ஒரு வங்குரோத்து நிலை காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டுக் கல்விக்கொள்கையில் இலங்கையின் ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் தக்க வைக்க முடியவில்லை. அது மட்டுமல்லாது இருபத்தியோராம் நூற் றாண்டின் ஆரம்பத்திலேயே முன்னைய கல்விக்கொள்கைகள் அனைத்தையுயம் மறுதலிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியது. காலனித்துவ கொள்கையை நிராகரித்த நிலைமாறி மீளவும் ஆங்கிலக்கல்வி, தனியார்கல்வி, முதலாளித்துவக்கல்வி என்ற எண்ணப்பாட்டில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

I

சுதந்திரத்தின் பின்பான இலங்கையின் அரசியல் வரலாற்றில் வகுக்கப்பட்ட கல்விக் கொள்கை யதார்த்தமான பின்புலங்க ளையோ உண்மையான உருவாக்கங்களையோ கொண்டிருக்க வில்லை என்ற எடுகோள் பிரதான பிரச்சினையாக முன்வைக்கப் படுகின்றது. இவ்வாறு கல்விக் கொள்கையில் அமுலாக்கம் 90 வீதம் எழுத்தறிவுடைய சமூகமாக இலங்கையரை மாற்றினாலும் பொருளாதார வளர்ச்சியிலும், தேசிய ஒருமைப்பாட்டிலும், சமூக இசைவாக்கங்களிலும்,இனவிழுமியங்களிலும் ஐக்கியமான முன்னு தாரணமான நாடாக இலங்கையை காட்டமுடியாதுள்ளது. அவ் வகையான பலவீனத்திற்கு காரணியாக அமைவது கல்விக் கொள் கையில் அரசியல் தலையீடா? என்ற கேள்வி எழுவது இயல் பானதே. கல்வி இயல்பான பரிமாண வளர்ச்சியை சமூகத்தில் ஏற்படுத்தும் பொறுப்பமைவுகளைக் கொண்டது. கல்வியியல் சிந்த னைகளிலும் அதன் அமுலாக்கங்களிலும் உலகம் அப்படியான அனுபவத்தினையே பகிர்ந்து கொண்டுவருகிறது. ஏனெனில் எல்லா மனிதனும் வேறுபாடின்றி, பகையின்றி, மோதலின்றி ஒன்று சேருகின்ற மையம் கல்விக்கூடங்கள் என்பது கிரேக்க சிந்தனைக் குழுவின் கருத்தாக அமைந்திருந்தது. (peter Teed: 1991)

அத்தகைய கருநிலை அருகியதாகவன்றி வளர்ந்துள்ளதாகவே மேற்குலக வரலாறு கூறுகின்றது. ஆனால், இலங்கையின் கல்விக் கொள்கை கூட்டுணர்வுக்கும், ஐக்கியத்திற்கும் பதிலாக முரண் பாட்டையும் பகையையும் வளர்த்துள்ளது.

பகைமையை கூர்மைப்படுத்துகின்ற அலகுகளை இளம் மட்டத்தில் இருந்து பெரியோர் வரை விரிவடைந்து சென்றமைக்கு கல்விக் கொள்கைக்குள் ஆரோக்கியமான அரசியல் சிந்தனைக ளுக்குப் பதிலாக குறுகியவாத, இனவாத, பகைப்புலத்தை ஏற்படுத் துகின்ற சிந்தனைகளை அரசியல் தலைவர்கள் விதைத்துள்ளனர். இதன் அறுவடை காலத்திற்குக் காலம் மாறுபட்டதாகவும், தீவிரம் மிக்கதாகவும் வளர்ந்து செல்கின்றதே அன்றி தேசிய ஐக்கியத் திற்கான உணர்வலைகள் விருத்தியடைகின்ற போக்கோ அல்லது மாறுதலடையும் சமூகத்தன்மையோ ஏற்படவில்லை. இன வன்மு றைக்கு கல்வியின் கட்டமைப்பு அதிக தாக்கங்களை ஏற்படுத்தும் காரணியாக விளங்குகின்றது. (C.R.De.Silva and Daya de Silva; 1990) இந்த அடிப்படையில் இனங்காணப்பட்ட பிரச்சினையை வரலாற்று அணுகுமுறையினுடாக ஆய்வு செய்கின்ற முயற்சி முன் னெடுக்கப்படுகின்றது. அதில் வரலாற்றை முதன்மைப்படுத்தாது இனங்காணப்பட்ட பிணக்கினையும் அதன் தாக்கங்களையும் மேல திகமான பரிசீலனைக்கு உட்படுத்தி ஆய்வின் தெளிவை கண்டு கொள்ள முயல்கின்றது.

## II

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த போதும் இதன் கல்விக்கொள்கையில் மாற்றத்தை 1972ஆம் ஆண்டு வரை காணமுடியாதிருந்தது. பிரித்தானியர் வரையறுத்த கல்விக் கொள் கையின் வடிவங்கள் பகுதி பகுதியாக மாற்றப்பட்டதேயன்றி முழுமையாக காலனித்துவ சிந்தனைக்குட்பட்ட கல்விச் சிந்தனை கள் தொடர்ந்தவண்ணமிருந்தன. 1972 கல்விச் சீர்திருத்தம் கூட அதனை முழுமையாக மாற்றியதென்று கணக்குப்போட முடியாது. ஆனால் காலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் அதாவது 1920 களில் எழுந்த சுயபாசையிலான கல்வி அல்லது சுதேசிய மொழிக் கொள்கையின் கீழான கல்வி என்ற எண்ணப்பாடு சுதந்திரத்திற்குப் பின்பு தீவிரவளர்ச்சியை அடைந்தது. 1943 ஆம் ஆண்டில் வெளியி டப்பட்ட விசேட கல்விக் குழுவினரின் அறிக்கை போதனாமொழி

அடிப்படையில் இரு வேறு வகைப்பட்ட பாடசாலைகள் (ஆங்கிலப் பாடசாலைகள், சுயமொழிப்பாடசாலை) நாட்டில் நிலவியதையே கல்வி முறையில் ஒரு முக்கிய குறைபாடாக ஏற்றுக்கொண்டது. இதனால் ஆங்கில மொழிக்கு இருந்த முக்கியத்துவம் அருகி சுய மொழிக் கொள்கை படிப்படியாக மாற்றமடைந்தது. 1960களில் பாடசாலைக்கல்வி சுயமொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்ற நிலை ஏற்பட்டது. இது பின்னர் உயர்கல்வியையும் ஆக்கிரமித்துக் கொண்டது. 1956 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இடதுசாரிக் கொள் கைகளால் கவர்ந்த மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) அரசாங்கம் உருவாக்கிய தனிசிங்களச்சட்டம் பெருமாறுதல்களையும், விளைவு களையும் கல்விக்கொள்கையில் உருவாக்கியது. தனிச் சிங்களச் சட்டம் கல்விக்கான போதனா மொழிக் கொள்கையில் பாதிப்பை ஏற்படுத்தியது. ஏற்கனவே வளர்ந்து வந்த சுயமொழிக் கொள்கை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தனிச்சிங்களச் சட்டத் தால் மேலும் தீவிரம் பெற்றது. பண்டாரநாயக்கா அரசியலில் தனது எதிர்காலத்தை ஒளிமயமாகக்குவதற்காக 24 மணித்தியாலத்தில் தனிச் சிங்களச்சட்டமென முழங்கியதும் ஆங்கில ஆதிக்கத்தின் மீது சீற்றம் கொண்ட மக்களும், பொருளாதார கஷ்ரங்களினால் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருந்த மக்களும் பண்டாரநாய க்காவுடன் இணைந்தார்கள். குறிப்பாக சுயமொழிக் கல்வியில் வளர்ந்த கிராமப்புற ஆசிரியர்கள், சுதேசவைத்தியர்கள், மத அடிப் படை பிரிவினரான பௌத்த பிக்குகளும் பண்டாரநாயக்காவின் வெற்றிக்கு காரணமானார்கள்.

பண்டாரநாயக்காவின் சுயபாசைக்கொள்கையினால் கிராமப் புற இளைஞர்களும் யுவதிகளும் நகரத்திலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு படையெடுத்தனர். ஆங்கிலக்கல்வியில் சீற்றம் கொண்டிருந்த பின்தங்கிய மக்கள் சுயபாசையில் கல்வி கற்றதுடன் உயர்கல்வியை கற்பதற்கான வாய்ப்பையும் பெற்றனர். 1960 களு க்குப் பின்னர் கல்வி ஊடகங்களை தெரிவு செய்வதற்கான உரி மையை அந்தந்தப் பல்கலைகழகங்களிடம் விடுகின்ற நடை முறையை அரசு முன்மொழிந்தது. இதனால் கல்வியில் ஊடகத்தை சுயபாசையிலேயே அனேக பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளத் தொடங்கின. அது மட்டுமல்ல ஏற்கனவே தொடங்கியிருந்த இன

உணர்வும், முரண்பாடும் பிரதேச அடிப்படையிலான பல்கலைக் கழகங்களில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதனால் பல் கலைக்கழகங்களில் இருந்து வெளியேறுகின்ற பட்டதாரிகளது எண்ணிக்கை அதிகரித்தது. பாடசாலைக்கல்வியை முடித்த இளைய தலைமுறையினர் எல்லோருக்கும் பல்கலைக்கழக கல்வி கிடைக்கவில்லை. இதனால், இவ்விரண்டு பிரிவினரின் தொகைக் கும் ஏற்றவகையில் அதாவது பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு இல்லை, உயர்கல்விக்கு புகமுடியாத இளையதலைமுறைக்கும் இலங்கையில் வேலை வாய்ப்பில்லை. 1945 இல் 21,886 பேர் வேலையற்றோராக இருந்த நிலை 1971 இல் 70,000 பேராக அதி கரித்தது. (Rohan Gunaratna : 1990) இதனால் 1960 களின் பிற் பகுதியிலிருந்த இளைஞர்கள் அரசியலில் அதிகம் ஈடுபடத் தொட ங்கிவிட்டனர். அதாவது, பண்டாரநாயக்காவின் சுயமொழிக் கொள் கையால் கிராமிய இளைஞர்கள் பெருந்தொகையில் படிக்கக்கூடிய வாய்ப்புக்கிடைத்ததுபோல் அரசு அவர்களுக்கு உரித்தான பொரு ளாதார திட்டங்களையோ, வேலைவாய்ப்புக்களையோ, உருவாக் கவில்லை. இதனால் விரக்தியுற்ற இளைஞர்கள், யுவதிகள், அரசி யல் வன்முறையில் ஈடுபடுவதற்கான ஆயுதம்தரித்த கலகக்காரர் களாக மாறினர்(Robert N. Kearney :1974) கிளர்ச்சி செய்யும் ஆயுததாரிகளாக திரண்டது மட்டுமன்றி அரசை மாற்றுவதற்கான மார்க்சிச பாணியிலாக ஆயுதப்போராட்டமாக அதனை விரிவாக்கி 1970களில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு பெரும்தலைவலியைக் கொடுத்தனர். கணவன் பண்டாரநாயக்கா உருவாக்கிய குறுகிய அரசியல் அபிலாசைக்கான மொழிக் கொள்கையின் விளைவுகளை மனைவி சிறிமாவோ பண்டரநாயக்கா தமது ஆட்சிக்காலத்தில் அறுவடை செய்து கொண்டார். இலட்சக்கணக்கான இளைஞர் களையும், யுவதிகளையும் சிறையில் தள்ளியதுடன் பல ஆயிரத் துக்கு மேற்பட்ட இளைஞர்,யுவதிகளை கிளர்ச்சியாளர்கள் என்ற போர்வையில் அரசின் இராணுவத்தினையும் பொலீஸையும் ஏவி விட்டு அழித்தார். (Rohan Gunatna : 1990) சுயபாசையின் வரு கையை கண்டிப்பதனை விடுத்து சுயபாசை கல்விக் கொள்கைக்கு ஏற்ப வேலைவாய்ப்புக்களை, பொருளாதார திட்டமிடல்களை இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் மேற்கொள்ளவில்லை.

மாறாக அவர்களை உதாசீனம் செய்து தமது அதிகாரம், பதவி போன்ற சொந்த நலன்களை பேணிவந்தனர். அதனால் ஆயுதப்போர் தென்னிலங்கை இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் அவசியமான அம்சமாக மாறியது.

## III

தென்னிலங்கையில் அரசியலில் இளைஞர்கள் ஏற்படுத்திய கொந்தளிப்பை ஆட்சியாளர்கள் தம்மீதுள்ள குறைபாடாகக் கருதாது வடக்கு, கிழக்கு இளைஞர்களின் திறமை மீதான குறைபாடாக கருதி தென்னிலங்கை இளைஞர்களை வடக்கு கிழக்கு இளைஞர்கள் மீதும், மக்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்தி முரண்பாட்டை வளர்த்தனர். "புதியபாதை" கல்விக்கான மறுசீரமைப்பை வலியுறுத்த மறுபக்கத்தில் "தரப்படுத்தல்" என்ற பெரும் அபாயமான நடவடிக்கையில் சிறிமாவோவின் அரசாங்கம் ஈடுபட்டது. மொழிரீதியான தரப்படுத்தல், மாவட்ட ரீதியான கோட்டா முறைமை, பின்தங்கிய மாவட்ட அடிப்படை என பல மாறுதல்களை தரப்படுத்தல் ஏற்படுத்தியது. (C.R.De.Silva. and Daya.De.Silva: 1990) குறிப்பாக பொறியியல், மருத்துவம் என்பவற்றுக்கான தமிழ் மாணவர்களின் வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டு தென்னிலங்கை மாணவர்களுக்கு வழங்கியது. தமிழ் மாணவர்களின் பொறியியல் நெறிக்கான அனுமதி 1973 இல் 24.4 சதவீதத் திலிருந்து 1974 இல் 16.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1975 இல் 13.2 சதவீதமாக குறைந்தது. மருத்துவம் 36.9 சதவீதத்திலிருந்து 17.4 சதவீதமாக வீழ்ச்சிகண்டது. இத்தரப்படுத்தல் நடவடிக்கையால் வடக்கு கிழக்கில் உள்ள பின் தங்கிய மாவட்டங்கள் பல நன்மைகளைப் பெற்றாலும் அது பாதிக்கப்பட்ட அளவினதும் முக்கியமான நெறிகளதும் பயன்பாட்டுடன் ஒப்பிடும் போது பாதகமாகவே அமைந்திருந்தது. அதனைவிட "தரப்படுத்தல்" என்ற சிறிமாவே அரசாங்கத்தின் கல்விக்கொள்கை பெரும் அரசியல் முரண்பாட்டை வளர்த்தது. அதற்கு தனித்துவமான அரசியல் பரிமாணம் காணப்பட்டது. தரப்படுத்தலுக்கும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கும் நெருக்கமான உறவிருந்தது. தமிழ் மக்களின் பொருளாதாரம் கல்வியிலே தங்கியிருந்தது. கல்வியே வடக்கு இளைஞர்களதும் யுவதிகளதும் பிரதான மூலதனமாக விளங்கியது. அதனால் தரப்படுத்தல் வடக்கின் அடிப்படை இருப்பை அதிரவைத்தது. இளைஞர்கள் பெருமளவுக்கு

அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். அது ஆயுதம் தாங்கிய போராட்டமாக பரிணாமடைந்து தமிழர் கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையின்படி சுதந்திர அரசமைக்கின்ற நடவடிக்கையில் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காத இளைஞர்களும், பல்கலைக்கழகம் முடித்து வேலையற்றிருக்கும் பட்டதாரிகளும் இணைந்து கொண்டனர். (சுனில் பஸ்தியன்: 1995, மொ.பெ) தனிநாட்டுக் கோரிக்கைக்கான சூழலை உருவாக்கிய தரப்படுத்தல் ஆயிரக் கணக்கான இளைஞர்களை பிறநாடுகளுக்கு இடம்பெயரச் செய்ததுடன் அரசியல் வன்முறைகளிலும், சமூக வன்முறைகளிலும் ஈடுபடத்தூண்டியது. பண்டாரநாயக்கா தென்னிலங்கை இளைஞர்களை ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடத் தூண்டியது போல் வடகிழக்கு இளைஞர்களை ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் கல்விக் கொள்கை ஆயுதப் போராட்டத்துடன் இணைந்தது.

இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டுக் கொள்கையை அரசு திட்டமிட்டு கல்விக் கொள்கையினூடாக வளர்த்து வருவதனையே இது காட்டுகின்றது. தென்னிலங்கையில் எழுச்சியடைந்த அரசியல் வன்முறையை கட்டுப்படுத்த வடகிழக்குப் பகுதியினைப் பயன்படுத்தியதே அரசின் மாற்றுச் சிந்தனையாக அமைந்திருந்தது, அத்தகைய மாற்றுச் சிந்தனையை கையாண்ட அரசு பல்லின சமூக கட்டமைப்பைக் குலைத்து இன உணர்வைக் கொண்ட ஒரு சமூகத்தையும், தேசியத்தையுமே உருவாக்க திட்டமிட்டிருந்தது.

## IV

இலங்கைக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் ஒன்றும் 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்புடன் முன்வைக்கப்பட்டது. அச்சீர்திருத்தத்தின் பிரதான நோக்கம் குடியரசு என்பதற்கு சமமான கல்விக் கொள்கை ஆக்கப்பட வேண்டும் என்பதுடன் நாட்டின் தேசிய வளங்களை பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் சாதனமாக மனித சக்தியை மாற்றும் கல்விக் கொள்கையை உருவாக்குவதுமாகும். (அ.முத்துலிங்கம் 1974) இதனடிப்படையில் காலனித்துவக் கொள்கைகள் பல கைவிடப்பட்டு புதிய பாதையெனக் கருதும் இடதுசாரித் தன்மை பிரதிபலிக்கும் சீர்திருத்தப்பாங்கு காணப்பட்டது. அரசியலில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் எப்படி இடதுசாரிகளை ஒன்றிணைத்த ஓர் அரசை நிறுவியதோ அதே

போன்று ஒரு கல்விக் கொள்கையையும் தயாரித்தது. அக் கல்விக் கொள்கை இடதுசாரி, வலதுசாரி என்பதற்கு அப்பால் கலப்புத் தன்மை பொருந்தியதும், நாட்டின் வளங்களின் உச்சப்பயன்பாட்டை அடைதலும், மனித சக்தியை பயனுடையதாக்குவதும் நோக்கமாக அமைந்தது. இதனால் கல்வியின் புதியபாதை பொதுக்கல்வி, உயர்கல்வி ஆகிய இரண்டிலுமே சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது. கலைத்திட்டத்தில் பாரிய மாற்றங்களை முன்வைத்த புதிய பாதை தொழில்நுட்ப பாடநெறியில் பிரதேசவளங்களை பயன்படுத்துகின்ற வாய்ப்புக்களை உருவாக்கியது. அத்தகைய வாய்ப்புக்கள் இடதுசாரிக்கட்சிகளின் தலையீட்டினாலும், கோரிக்கைகளாலுமே, ஏற்பட்டதென்பதனை குறிப்பிட்டுக் கூறுவது பொருத்தமானதாகும். (Ranjan Philips - 2001) அதனால் புதிய பாதையில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் இடதுசாரிக் கட்சிகளின் அரசியல் நலன்களை சாத்தியப்படுத்துகின்ற அம்சங்களாவே காணப்பட்டன. இது நேரடியாகவே இலங்கையின் கல்விக் கொள்கையை பாதித்தது. ஆட்சியாளர்கள் தங்கள் விருப்புக்களை நிறைவேற்றுகின்ற அம்சங்களில் ஒன்றாக இலங்கையின் கல்விக்கொள்கையை அமைத்திருந்தனர். தொழில்நுட்ப பாடங்கள் வாயிலாகவும், புதிய பாதையின் இலக்காகவும் இருந்த பிரதேச வளப்பயன்பாடு என்ற சிந்தனை அமுலாக்கலில் பெரும் குறைபாடுடையதாக விளங்கியது. காரணம் வடகிழக்கு பாடசாலைகளுக்கும் தென்னிலங்கையில் இருந்த கிராமிய பாடசாலைகளிலும் நகரங்களில் தயாரிக்கப்பட்ட பாடநூல்களும், கலைத்திட்டங்களுமே அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் அமுலாக்கலில் பெரும் நெருக்கடியையும், ஆசிரியர் பற்றாக்குறையையும் எதிர்கொண்ட தமிழ்ப்பிரதேசங்களின் தொழிற்கல்வி நகரங்களில் காணப்பட்ட தொழில்வளங்களை பிரயோகப்படுத்த முடியாத நிலையில் பரீட்சைமையமான கல்வியாக அமைந்தது. தமிழ் மாணவர்களது கலைத் திட்டங்கள் சிங்கள மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருந்ததனாலும், சிங்கள வினாத்தாளின் மொழிபெயர்ப்பு பரீட்சையில் இடம் பெற்றதாலும் பரீட்சை நோக்கத்தை பூர்த்தி செய்வதாக தமிழ் மாணவர்களின் பாடவிதானங்கள் அமைந்திருந்தன. இது தொடர்பான கருத்துக்கள் தமிழ் தேசியத்தின் விசுவாசிகளால் பிரச்சினைக்குரிய காரணியாகக் பிரச்சாரப்படுத்தப்பட்டதுடன் தமிழ் அரசியல் தலைவர்களும், புத்திஜீவிகளும் அரசின் அத்தகைய நடவடிக்கைகளை கண்டித்தனர். (A.Jeyarathnam

Wilson 1988) சிறிமாவோ பண்டாரநாயக்கா 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை திறந்து வைக்க வருகை தந்த போது எழுந்த எதிர்ப் பலைகள் அனைத்தும் அவரது அரசாங்கத் தின் கல்விக் கொள்கை யின் மீதான வெறுப்பாலேயே ஏற்பட்டது. தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் தீவிரமாக இணைந்து கொள்வதற்கு பிரதான உந்தலாக அமைந்திருந்தது தரப்படுத்தல் ஆகும். (C.R. de. Silva and Dayade Silva, 1990)

## V

புதிய பாதைக்கு இன்னோர் தடையாக 1977அம் ஆண்டு அரசி யல் மாற்றம் நிகழ்ந்தது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி பாரிய மாற்றம் எதையும் உடனடியாக மேற்கொள்ளாது படிப்படியாக சில மாற்றங்களை முன்வைத்து இறுதியில் புதிய பாதையை முற்றாக தகர்த்தது. அதுமட்டுமல்லாது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இணைந்திருந்த இடதுசாரிக் கட்சிகளதும் அதன் சிந்தனையிலும் ஒன்றாக நலன் பேணுகின்ற (welfare) சமூகவடிவங்களை அமுல் படுத்தத் தொடங்கியது. இது இடதுசாரிய சிந்தனையை உலக ளாவிய ரீதியில் தோற்கடிக்க முதலாளித்துவ சக்திகள் உருவாக் கிக் கொண்ட விடயம். அதனை இலவசக்கல்வியினூடாக குடி யேற்ற ஆட்சியாளர்கள் ஆரம்பித்து வைத்தனர். அதனை பின்பற்றி இலவச பாடநூல் விநியோகம், முத்திரை விநியோகம், போசாக்கு உணவுத் திட்டம், மற்றும் பாடசாலைச் சீருடை விநியோகம், மகா பொல என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை கல்வியினூடாக அரசி யல் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான நடைமுறைகளாகவே விளங்குகின்றன. ஐக்கிய தேசிய கட்சி தனது 17 ஆண்டுகால தொடர்ச்சியான ஆட்சியை பாதுகாத்துக் கொள்வதற்கும், மக்களி டமிருந்து பெரும்எதிர்ப்புகளை எழவிடாது தடுத்து நிறுத்துவதற்கும் இடப்பட்டஅத்திவாரமாகவே அவை அமைந்துள்ளன. இதனால் இடதுசாரிச் சிந்தனை தகர்க்கப்பட்டதுடன் இலங்கையின் பொருளா தார அமைப்பினை முதலாளித்துவமாக ஐ.தே.க மாற்றியது. இது பாடசாலைக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம் வரை விரிவடைந் தது. இத்தகைய அணுகுமுறை உலகமயப்படுத்தல் என்ற மேற்கு லக பரப்புகை இலக்கை வேகமாக சென்றடைய வழிவகுத்தது. அதற்கு ஐ.தே.கட்சியின் கல்வி தொடர்பான அணுகுமுறை பிரதான பங்கை ஏற்படுத்தியிருந்தது. இதனை விளங்கிக் கொள்ள இன்னோர் சம்பவத்தினை நோக்குவோம்.

1989 ஆம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுண (ஜே.வி.பி) இரண்டாவது தடவை எழுச்சியடைந்ததுடன் தலைமையை இழக் கின்ற வீழ்ச்சியை சந்தித்தது. 1971 இல் நிகழ்ந்தது போல் மீண்டு மொரு வன்முறைஅரசியல் தென்னிலங்கையை கொதிநிலைக்குத் தள்ளியது. இதற்கு வழிவகுத்த பிரதான காரணி இலவசக் கல்வி யின் கீழ் வளர்ந்த தனியார் மயமாக்கலுக்கான வரைபைக் கொண்ட கல்விக் கொள்கையை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங் கம் 1977 க்குப் பின்பு அமுலாக்கியதேயாகும். (Jani de Silva ; 1998) 1980 களின் பிற்பகுதியில் North Colombo Medical College ஐ தனியார் உருவாக்க அனுமதியளித்தது. இதனை எதிர்த்து General Medical Officers Association வேலை நிறுத்தத்தை மாதக்கணக்காக நிகழ்த்தியது. இதனுடன் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்ததுடன் இடதுசாரி அரசியல் கட்சிகள் அனைத்தும் இவ்வேலை நிறுத்தத்திற்கு ஆதர வளித்தன. இதற்கு எதிராக அரசின் நடவடிக்கையில் பாதிக்கப் பட்ட பல மாணவர்கள் ஜே.வி.பி அமைப்பில் இணைந்து கொண்ட னர். (Gunaratne ; 1990) இதனை விட தென்னிலங்கைத் தொழிற் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டங்களும் அரசின் நடவடிக் கைக்கு எதிராக தீவிரமடைந்தது. போக்குவரத்துபிரிவை (S.L.T.B) தனியாரிடம் ஒப்படைப்பது பற்றிய அரசின் முடிவை எதிர்த்த போக் குவரத்து ஊழியர்களது வேலைநிறுத்தோடு, புகையிரத ஊழியர், தொலைத்தொடர்பு ஊழியர் என வேலை நிறுத்தம் தீவிரமடைந் தது. இதனை எதிர்த்து அரசு இராணுவ-பொலிஸ் பிரிவின் நடவடிக் கையை ஆரம்பித்து ஜே.வி.பி இன் கிளர்ச்சியை மீளவும் அடக்கி யது. பாரிய அழிவுகளை தென் இலங்கை இளைஞர் - யுவதிகள் மீண்டும் எதிர் கொண்டனர்.

மீளவும் கல்விக் கொள்கையில் மாற்றங்கள் என ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வருகைதந்ததுடன் தமது கொள்கையும், நலன்களையும் அடைவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குகின் றன. இளைஞர்களதும், அவர்கள் சார்ந்த நாட்டினதும் நலன்களுக் கும் அப்பால் வெளிநாடுகளதும், அவைசார்ந்தநிதி நிறுவனங்க ளது தேவைகளை பூர்த்தி செய்கின்ற போக்கே அரசிடம் காணப் படுகிறது. அரசாங்கங்களினதும், ஆட்சியாளர்களதும் கையாலா காத்தனத்தை மறைத்து இனரீதியாகவும், வர்க்க அடிப்படையிலும்

முரண்பாடுகளை வளர்த்து பகைமையை அதிகரித்து வருகின்றன. இதனால் காலனித்துவகால கல்விக் கொள்கையிலிருந்து பெரிய மாற்றம் எதனையும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இலங்கையில் ஏற்படுத்தவில்லை. அத்தகைய சூழலில் 1997 இல் பொதுக்கல்வி சீர்திருத்தமொன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்தது. இதுவும் மேற்கு நாடுகளின் கல்விக் கொள்கையாகவே விமர்சிக்கப்பட்டு வருகின்றது. எனவே இலங்கை மக்களுக்கும், அவர்களின் வளங்களுக்கும், அவர்களது சமூக ஒழுங்குக்கும் ஏற்ப கல்விக் கொள்கையை பொதுவாக வகுத்து அணுகுவதுடன் ஆட்சி மாற்றமும் அரசியல் தலைமையும் கல்விக் கொள்கையில் தலையிடாதிருக்குமாயின் இலங்கை போன்ற நாடுகளின் எதிர்காலத்திற்கு இலாபகரமானதாக அமையும். கல்வியில் அரசியல் தலையீடே இன முரண்பாட்டை கூர்மைப்படுத்துகின்ற பிரதான காரணியாகும்.

## Reference:


01.Peter Teed; A Dictionary of Twentieth century history (1914-1990) Oxfort University press., July 1991, pp: 179-180

02. C.R.de. Silva and Daya de silva; Education in Sri Lanka 1948 - 1988. Novarank on New Delhi, 1990, pp: 1- 66

03.முத்துலிங்கம்,அ, கல்வியியல் ஓர் அறிமுகம், ஆசீர்வாதம் அச்சகம். யாழ்ப்பாணம், 1974, பக் 299 - 308

04. Rohan Gunaratna; Sri Lanka ; A lost Rovolution? The Inside story of the JVP, Colombo, 1990. pp. 1-25

05.Educational Expansion and politacal volatitity in Sri Lanka The 1971 Insurrection, C.R.de.Silva and Daya de Silva (Ed.) Robert N.Kearney / Education and Politics in Sri Lanka. 1990 pp. 727 - 744.

06.சுனில் பஸ்தியன்; பல்கலைக்கழக அனுமதியும் தேசிய இனப்பிரச்சினையும், சமூக விஞ்ஞானிகளின் சங்கம் (மொ.பெ) இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும். யாழ்ப்பாணம். 1985. பக் 247 - 259.

07.Ranjan Philips; (Ed) Sri Lanka: Global challenges and National Crises : Ecumenical Institute for Study and dialogue and social Scientist' Association. Colombo. 2001, pp. 19-61.

08. Jani de Silva; Praxis, Language and silences: The July 1987 uprising of the JVP in Sri Lanka, Michael Roberts (Ed) Sri Lanka, Collective Identities Revisited (Vol.II) Marga Institute, 1998. pp. 163-194